OS.No. 139/2022

Date : 23.07.2026

Witness Name & Rank – கருப்புசாமி – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிணறும் கிணற்றை சுற்றியுள்ள பொது இடத்திற்கும் எனது அனுபவத்தை தடுக்கக்கூடாது என உறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எத்தனை சொத்து விவரங்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் 3 சொத்து காட்டப்பட்டுள்ளது, க.ச.எண்.687, 691, 683 ஆகிய சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. 687 காலையில் எத்தனை உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 2 ஆகும். 687/2A2 ல் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் குறிப்பிட்டு தெரியாது. 687/2 காலையில் உள்ள கிணறு எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 5 செண்ட் ஆகும், ஆனால் 7 செண்டாக குறிப்பிடப்பட்டுள்ளது அதில் எனது வீடும் வீட்டின் முன்புறம் உள்ள இடமும் சேர்க்கப்பட்டுள்ளது.
2. அவ்வாறு 687/2 கிணறில் குறிப்பிட்டுள்ள இடமும் வீட்டின் முன்புறம் உள்ள இடமும் என சொல்லியுள்ள நிலையில் அது என்னுடையது என வழக்குரையில் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. எனது வழக்குரையின் படி காலை எண். 691/2ல் எனக்கு கிடைக்கப்பெற்றது 16 செண்ட் என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி 691/2 காலையானது புதிய உட்பிரிவின் படி 691/2A என உட்பிரிவு செய்யப்பட்டு எனது பத்திரத்தின்படி கிடைக்கப்பெற்ற 16 செண்ட் குறிப்படாமல் 20.92 செண்ட் என குறிப்பிடப்பட்டு அதன் மூலம் 4.92 செண்ட் அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல. அட்டவணை 4 க.ச.எண். 683/1B காலையில் எனக்கு கிடைக்கப்பெற்றது 8 செண்ட் பூமி என்றால் சரிதான். மேற்படி க.ச.எண். 683/1B காலையானது உட்பிரிவு செய்யப்பட்டு 683/1B1 என எண்ணிடப்பட்டது என்றால் தெரியாது.
3. அந்த உட்பிரிவின்படி எனக்கு கிடைக்கப்பெற்ற 8 செண்ட் பூமியானது 8.29 செண்ட் என உள்ளது என்றால் தெரியாது. 683/1B காலையானது புதிய உட்பிரிவுன் படி 00 ½ என்பதற்கு பதிலாக 683/1B2 என உட்பிரிவு செய்யப்பட்டு 2.16 செண்ட் அதிகமாக உள்ளது என்றால் தெரியாது. மேற்படி நான் ஆதியில் வழக்கு தாக்கல் செய்த போது மொத்த வழக்கு சொத்தாக எனக்கு கிடைக்கப்பெற்ற 1.52 ½ ஏக்கர் சொத்திற்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், ஆனால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ராஜலட்சுமி

மற்றும் சத்தியன் என்பவருக்கு 37 ¾ நிலத்தை க.ச.எண். 687/2A2 நிலத்தில் விற்பட்ட நிலையில் அது குறித்து எனது வழக்குரையில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு தற்போது மேற்படி விற்பனைக்கு பிறகு 1.08 ¾ பாத்தியம் என்றால் சரிதான், அது இல்லாமல் 6 செண்ட் பாதை உரிமை உள்ளது. சொத்துக்கள் ஆதியில் 19.08.1970 ன்படி எனது தந்தைக்கு பாகத்தின்படி B அட்டவணையாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பாகம் கொடுக்கும் வரை அந்த சொத்தை எனது தந்தை தான் அனுபவத்தில் வைத்திருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை தான் அந்த சொத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். 1975 ல் சொத்தில் ஒரு பகுதியை 3 ம் நபருக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான். அந்த சொத்தை விற்று பவர் லூம் கட்டினார் என்றால் சரிதான். அந்த குடோனில் 8 தறி அமைத்து கொடுத்தார் என்றால் அமைத்தார். எனது தந்தைக்கு தறி ஓட்ட தெரியாது நான் தான் ஓட்டி வந்தேன் என்றால் எனக்கும் தெரியாது ஆள் வைத்து என தந்தை ஓட்டினார். நான் தான் மேற்படி 8 தறிகளை ஓட்டி பராமரித்து வந்தேன் என்றால் சரியல்ல.

4. மேற்படி தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு அதை எனது அப்பா விற்பனை செய்துவிட்டார் என்றால் அவர் தான் தறி அமைத்தார் அவரே விற்றுவிட்டார். எனக்கு கிடைக்கப்பெற்ற பாகசாசனத்தில் அந்த தறி குடோன் குறித்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 21.01.2004 ம் தேதி அது தொடர்பாக நானும் எனது அப்பாவும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் குடோன் மேலே எனக்கும் பாதி உரிமை 1 ம் பிரதிவாதிக்கும் எனது எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தில் கிழக்கு பக்கம் மற்றும் மேற்கு பக்கம் என பிரித்து எழுதப்பட்டது அந்த விவரம் எனக்கு தெரியும் இருந்தும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா–ஆ.1 பாகத்தின் படி A அட்டவணை எனது தந்தைக்கும் B அட்டவணை எனக்கும் C எனது தம்பி 1 ம் பிரதிவாதிக்கும் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை காலத்தில் எனது தம்பி கரூர் LGP கமபெனியில் பணியாற்றினார் என்றால் சரிதான். மேற்படி எனது தம்பி 2016 வரை சொத்திற்கு வெளியே வேலை நிமித்தமாக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் எனது தம்பியின் சொத்துக்களை எனது தந்தை தான் நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான்.

5. அந்த காலகட்டத்தில் குமார் என்ற நபரை பணி அமர்த்தியிருந்தார் என்றால் தெரியாது. 08.09.2022 ம் தேதி நான் மேற்படி குமாரை வீட்டை காலி செய்ய சொல்லி தகராறு செய்தேன் என்றால் சரியல்ல. அது தொடர்பாக மங்கலம் காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டு என்னை விசாரித்தனர் என்றால் சரிதான். எனக்கு

வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தின் படி கிடைக்கப்பெற்ற சொத்தை தவிர்த்து வேறு உரிமை எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது நான் 1ம் பிரதிவாதி வீட்டிற்கு சென்று அவரது மனைவியிடம் தகராறு செய்ததாக என் மீது புகார் கொடுக்கப்பட்டு மங்கலம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் நான் இந்த உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த நிலையில் என் மீது வீண் பொய் புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனது தந்தை எனக்கு 2004 ல் பாகம் கொடுத்ததில் இருந்து எனக்கு விவசாயம் தான் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். பத்திரத்தின்படி கிணற்றை ஆளுக்கு 2.5 செண்ட் உரிமை உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றை சுற்றி காம்பவுண்ட் உள்ளது என்றால் சரிதான், கிணற்றை சுற்றி தென்புறம் 16 அடியும், மேற்கு 10 அடியும் கிழபுறம் 6 அடியும் வடபுறம் 6 அடியும் உள்ளது. எனவே அந்த 5 செண்ட் கிணற்று பகுதியை இருவரும் பயன்படுத்தி கொள்ள உரிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றை சுற்றியுள்ள பகுதியை வேறு பயன்பாட்டின் உட்படுத்த முடியாது என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.